மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை
அ.வ.எண். 136/24
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: லேயாள்முத்தம்மாள் தேதி : 13.02.26
வயது : க/பெ : பரமானந்தம்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>13.02.26 குறுக்கு விசாரணை</u>

1. நான் கடந்த 10 வருடமாக சென்னையில் என் மகனுடன் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் வைத்தியலிங்கபுரத்தில் உள்ள வீட்டிற்கு 2024 ல் தான் வந்தேன் என்றால் சரியல்ல. 2006 ல் வந்தேன். என் கணவர் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். என் கணவர் 2014 ல் இறந்தார். என் கணவர் 1984 ல் வேலைக்கு சேர்ந்தார். என் கணவர் இறந்த பிறகு நாளது தேதி வரை குடும்ப ஓய்வுதீயம் பெற்று வருகிறேன் என்றால் சரிதான்.

2.தாவா இடம் என் கணவருக்கு எப்படி பாத்தியம் என்றால் வட்டாட்சியரால் அனுபவிக்க சொல்லி என் கணவருக்கு வழங்கப்பட்டதாகும். அதற்கு வட்டாட்சியர் ஆவணம் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் ஆம். அதனை என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேன். வட்டாட்சியர் என் கணவருக்கு கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு அனுபவமும் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

3.தாவா சொத்து 1 ம் வாதியின் மனைவியும், 2, 3 வாதிகளின் தாயாருமான மல்லிகாவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 8/73A என்ற குடிசை வீடு இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி கதவு எண்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.13 19:54:28 +0530

கொண்ட வீட்டிற்கு வைத்தியலிங்கபுரம் கிராம ஊராட்சிமன்றத்தில் வரி விதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வீட்டில் வாதிகளும், மல்லிகாவும் 2022ம் ஆண்டு வரை வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் 2024ல் சென்னையில் இருந்து வைத்தியலிங்கபுரத்திற்கு வந்து தபசில் சொத்தை அபரிக்கும் நோக்கில் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4.என் கணவர் 2014ல் இறந்ததற்கு பிறகு அவரது வாரிசுகளான நாங்கள் பட்டா வழங்க கேட்டு வட்டாட்சியரிடம் எந்த மனுவும் தாவா சொத்தினை பொறுத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டா உள்ளது. அந்த பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வட்டாட்சியரால் தாவா சொத்தின் அனுபவம் வழங்கப்படவில்லை என்பதால் தான் பட்டா பெற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5.என் கணவருக்கு திருச்செந்துார் வட்டாட்சியரால் 1994ல் தாவா சொத்து ஒப்படைவு செய்யப்பட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் அரசு ஊழியராக இருந்ததால் அவ்வாறு பட்டா வழங்க மார்க்கம் இல்லை என்றால் சரியல்ல. அப்படி பட்டா பெற்றிருந்தால் அது மோசடியானது என்றும், அதன் மூலம் எந்த உரிமையும் ஏற்படாது என்றும் சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தில் வாதிகள் அமைத்திருந்த முள்வேலியை 2024ல் நானும், என் வாரிசுகளும் உடைத்து சேதப்படுத்தினோம் என்றால் சரியல்ல. 2024ல் எங்கள் மீது வாதிகள் நாசரேத் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

6.விசாரணையில் காவல்துறையினர் எங்களை எச்சரித்து அனுப்பினர் என்றால் சரியல்ல. ஆவணம் இருந்தால் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டனர். நாங்கள் வாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிறகு ஊர் பெரியவர்களிடம் தாவா பிரச்சனை சம்பந்தமாக முறையிட்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு ஊர் பெரியவர்களிடம் சொன்னதால் தான் வாதிகள் பதில் அனுப்பாமல் இருந்துவிட்டனர் என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.13 19:54:32 +0530

7.நாங்கள் தான் வாதிகளின் அனுபவத்தினை தொடர்ந்து இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் தான் வாதிகளுக்கு நஷ்ட ஈடாக ரூபாய் 10000 கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.13 19:54:36 +05'30'

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.